# அமர் சேவா சங்கம், ஆய்க்குடி

# தலைவர் அறிக்கை

# 2021-2022

பேரன்புடையீர்.

*நமஸ்காரம். வாழ்க வளமுடன், வாழ்க வையகம்!.*

*எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவேயல்லாமல், வேறொன்றறியேன் பராபரமே!*

*எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும், இல்லாமை இல்லாத நிலை வேண்டும்..*

*யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்!*

நமது முதல் Patron-in-Chief திருC.சுப்ரமணியம் பாரத ரத்னா விருதாளர் 24-07-1993 அன்று அமர் சேவா சங்கத்திற்கு வருகை தந்ததோடு செப்டம்பர் மாத Bhavans Journal இதழில் "Human Wonder" என்ற தலைப்பில் சங்கத்தைப் பாராட்டியதை நன்றியுடன் நினைவுகூர்வோமாக. நமது தற்போதைய Patron-in-Chief Dr.M.S.சுவாமிநாதன், நமது Patron திரு.N.வாகுல், ஏப்ரல் 2022-லிருந்து நமது Patron-ஆக செயல்பட ஒப்புதல் வழங்கியுள்ள முன்னாள் CBI இயக்குநர் திரு.D.R.கார்த்திகேயன் I.P.S ஆகியோரது அறிவுரைகளும், வழிகாட்டுதல்களும் பயனுள்ளதாகயிருந்து வருகிறது. நமது முன்னாள் Patron (Late) திரு.S.V.மோனி சங்கத்திற்குச் செய்த பல நல்ல பணிகளை நன்றியுடன் எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டுள்ளோம்.

திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து தென்காசி தனி மாவட்டமாக 22-11-2019 அன்று அறிவிக்கப்பட்டதையும் திரு.G.K.அருண்சுந்தர் தயாளன் I.A.S அவர்கள் முதல் மாவட்ட ஆட்சியராகப் பொறுப்பேற்றுக் கொண்டதையும் 14-01-2020 அன்று அவர் சங்கத்திற்கு விஜயம் செய்து நமது சங்கச் செயல்பாடுகளைப் பாராட்டியதையும் கவனத்தில் கொள்வோமாக.

தென்காசி மாவட்டத்தின் இரண்டாவது மாவட்ட ஆட்சித்தலைவராக 15-11-2020 அன்று பொறுப்பேற்ற Dr.G.S.சமீரன் I.A.S அவர்கள் 12-12-2020 அன்று சங்கத்திற்கு விஜயம் செய்து நமது EI Project புத்துணர்ச்சி பெறுவதற்கு பல நடவடிக்கைகளை மேற்கொண்டார். நமது 3 நாட்கள் கோயம்புத்தூர் விஜயத்தின்போது ஆட்சித்தலைவர் Dr.G.S.சமீரன் I.A.S அவர்களை 01-06-2022 அன்று மரியாதை நிமித்தமாக சந்தித்து சங்கத்திற்கு அழைப்பு விடுத்தோம். சங்கத்தின் பல்வேறு செயல்பாடுகள் குறித்தும் விளக்கினோம். 02-09-2022 அன்று கோவை, சரவணம்பட்டி Kumaraguru Institutions ஏற்பாடு செய்திருந்த THE ORB - A Sphere for Practice, Passion and Performance திறப்பு விழாவில் கலந்துகொண்ட Dr.G.S.சமீரன் I.A.S நமது சங்கச் செயல்பாடுகளைப் பாராட்டிப் பேசினார். நிறுவனத்தின் Joint Correspondent திரு.சங்கர் வானவராயர் கூட்டத்தில் பங்குக் கொண்டோர் அறியும் வண்ணம் சங்கச் செயல்பாடுகளைப் பாராட்டி நம்மை கௌரவப்படுத்தினார். நிறுவனத்தின் Chairman Dr.B.K.கிருஷ்ணராஜ் வானவராயர் Correspendent திரு.M.பாலசுப்ரமணியம் மற்றும் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்ட Shri.Kailash Satyarthi Nobel Peace Laureate 2015 Social Reformer & Child Right Activist, Subedar Major Hon.Capt. Yogendra Singh Yadav, Param Vir Chakra Awardee 2021 ஆகியோருடன் நெருங்கிப் பழகி சங்க நடவடிக்கைகளை எடுத்துரைத்து அழைப்பு விடுக்கும் வாய்ப்புக் கிட்டியது.

16-06-2021 அன்று பொறுப்பேற்றுக் கொண்ட தென்காசி மாவட்டத்தின் மூன்றாவது ஆட்சித்தலைவர் திரு.கோபால் சுந்தர்ராஜ் I.A.S அவர்களை நாம் தென்காசி

I.C.ஈஸ்வரன் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற (15-08-2021) சுதந்திர தின விழா, (26-01-2022) குடியரசு தின விழா ஆகிய கொடியேற்று நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு உரையாடி சங்கத்திற்கு அழைப்பு விடுத்தோம். பல்வேறு பணிகளின் காரணமாக அவரால் சங்கத்திற்கு விஜயம் செய்ய இயலவில்லை. 16-06-2022 அன்று நான்காவது மாவட்ட ஆட்சித்தலைவராகப் பொறுப்பேற்றுக் கொண்ட திரு.P.ஆகாஷ் I.A.S அவர்கள் நமது அழைப்பை ஏற்று 19-06-2022 அன்று நமது 40-வது ஆண்டு துவக்கவிழாவினை முன்னிட்டு மாண்புமிகு மாநில ஆளுநர் கலந்துகொண்ட நிகழ்ச்சியில் பங்கேற்றுச் சிறப்பித்தார். அவர் பொறுப்பேற்ற இரண்டு மாதங்களுக்குள் குற்றாலம் சாரல் திருவிழாவினையும், சுதந்திர தின விழாவினையும், அரசு அதிகாரிகள், பணிபுரியும் அன்பர்கள் துணைகொண்டு மிகச்சிறப்பாக நிகழ்த்தி அமைச்சர்கள், பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், சுற்றுலாப் பயணிகள் மற்றும் பொதுமக்களுடைய பாராட்டினைப் பெற்றார். 15-08-2022 அன்று நடைபெற்ற சுதந்திர தினவிழாவில் மாற்றுத்திறனாளிகளுக்கு சிறந்த சேவை புரிந்தமைக்காக கீழ்க்கண்ட சங்கப் பணியாளர்கள் ஆறு பேருக்கு திருவாளர்கள் P.செல்வராஜ், KK.கிருஷ்ணபிள்ளை, P.ராமசுப்பிரமணியன், V.லெட்சுமணன், N.சுப்புலெட்சுமி, V.நவமணி ஆகியோரை மாவட்ட ஆட்சியர் பாராட்டுச் சான்றிதழ் வழங்கி ஊக்குவித்தார். சாரல் விழா நிகழ்ச்சி துவக்க விழாவில் ஆய்க்குடி நாதஸ்வர வித்வான் திரு.மந்திரமூர்த்தி கம்பர் அவர்களுக்கு மாவட்ட அளவில் சிறந்த நாதஸ்வர கலைஞர் என்ற சிறப்பு விருதுக்குரிய பொற்கிளியையும், கலைமுதுமணி என்ற பட்டத்தையும் வழங்கி கௌரவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. நிறைவுவிழா நிகழ்ச்சியில் நாம் கலந்துகொண்டபோது நம்மை மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சருக்கு மாவட்ட ஆட்சியர் அறிமுகப்படுத்தினார்.

18-09-2021 அன்று தமிழக ஆளுநராகப் பொறுப்பேற்றுக்கொண்ட மாண்புமிகு திரு.R.N.ரவி அவர்கள் தேசிய கவிஞர் திரு.சுப்ரமணிய பாரதி சிலை திறப்பு விழா மற்றும் தமிழ்ப் புத்தாண்டு தினத்தையொட்டி 14-04-2022 அன்று ஏற்பாடு செய்திருந்த விருந்தில் கலந்துகொள்ளும் வாய்ப்பு அடியேனுக்கும், செயலருக்கும் கிட்டியது. அந்நிகழ்வில் ஆளுநர் அவர்களையும், அவரது துணைவியார் அவர்களையும், பல முக்கியப் பிரமுகர்களையும் சந்திக்க முடிந்தது. அதனையடுத்து 16-04-2022 அன்று ராஜ்பவனில் நாங்கள் இருவரும் மாண்புமிகு ஆளுநர் அவர்களை நேரில் சந்தித்து சங்கத்திற்கு விஜயம் செய்ய அழைப்பு விடுத்தோம். நமது FCRA Renewal, கிடைக்க உதவிட வேண்டும் என்ற கோரிக்கையை அவருடைய கவனத்திற்குக் கொண்டு சென்றோம்.

சங்கத்தின் 40-ஆவது ஆண்டு விழாவினை முன்னிட்டு நமது அழைப்பை ஏற்று 19-06-2022 அன்று சங்கதிற்கு வருகை புரிந்து, நமது செயல்பாடுகளைப் பார்வையிட்டதோடு கவர்னர் நிதியிலிருந்து 15-02-2020 அன்று நன்கொடையாக வழங்கப்பட்ட ரூ.51 லட்சம் தொகையினைக் கொண்டு சங்கத்தின் வடக்கு எல்கையில் கட்டப்பட்டுள்ள 650 அடி நீளம், 9 அடி உயரம் கொண்ட சுற்றுசுவர் (North side compound wall) சோலார் திட்டம் Phase-I (நன்கொடை-ABB இந்தியா லிமிடட்) மற்றும் பல்நோக்குப் பயிற்சி மையம்-MTU-Upstairs (நன்கொடை-Sanmina India Ltd.) ஆகியவற்றை மேதகு தமிழக ஆளுநர் திரு.R.N.ரவி அவர்கள் தலைமை விருந்தினராகக் கலந்துகொண்டு திறந்துவைத்தார். கௌரவ விருந்தினராக தென்காசி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.P.ஆகாஷ் I.A.S அவர்களும் சிறப்பு விருந்தினராக சென்னை திரு.ஜெகநாதன், CFO and Director Finance, Sanmina India Ltd., ஆகியோரும் கலந்துகொண்டார்கள். செயலர் திரு.S..சங்கரராமன் தலைமையில் பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டு ஆளுநர் வருகை நிகழ்ச்சி மிகச் சிறப்பாக நடந்தேறியது. இவ்விழாவில்

நன்கொடையாளர்கள், நலம் விரும்பிகள், பணியாளர்கள், அரசு அலுவலர்கள், உயர் அதிகாரிகள், MP, MLA, அரசியல் கட்சிப் பிரமுகர்கள், பத்திரிக்கைத் துறை அன்பர்கள், காவல் துறை அதிகாரிகள், பாதுகாப்பிற்காகப் பணியமர்த்தப்பட்ட 500-க்கும் மேற்பட்ட காவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டார்கள். REC Hall-ல் குளிர்சாதன வசதி இதற்காக ஏற்படுத்தப்பட்டு புதுபிக்கப்பட்டது. ஆளுநர் சங்கத்தின் செயல்பாடுகளைப் பாராட்டி பேசியது சங்கத்தின் உறுப்பினர்கள், பணியாளர்கள் அனைவருக்கும் ஊக்கத்தையும், உற்சாகத்தையும் அளித்தது.

Nationl-State Level Wheel Chair போட்டிகளில் வெற்றி வாகை சூடிவரும் திருநெல்வேலி திரு.லெட்சுமணன் மற்றும் போலியாவால் பாதிக்கப்பட்ட Ms.கனகலெஷ்மி, நீதிமன்றத்தில் தொடர்ந்து வழக்காடி வெற்றி பெற்று 35 வயதில் Tirunelveli Medical College-ல் இடம் கிடைத்து MBBS முடித்த பின்பு கோவை அரசு மருத்துவ கல்லூரியில் MD மூன்றாமாண்டு படித்து வரும் மாற்றுத்திறனாளி (போலியோ) Dr.K.பெரியசாமி, +2 முடித்த நிலையில் காஞ்சி பிளாக்கில் 2009-ஆம் ஆண்டு சிகிச்சை மற்றும் மறுவாழ்விற்காக அனுமதிக்கப்பட்டு நமது வளாகத்திலேயே IGNOU Centre-ல் B.Com., முடித்து ஏப்ரல் 2021-ஆம் ஆண்டு CA சான்றிதழ் பெற்ற திருச்செங்கோடு Quadriplegic CA.S.ராஜேஸ்வரன் ஆகியோர் இவ்விழாவில் மாண்புமிகு ஆளுநர் அவர்களால் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள்

13.06.2022 அன்று சென்னையில் மாற்றுத்திறனாளி நலத்துறையினை தன் பொறுப்பில் கொண்டுள்ள மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு.M.K.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான நலவாரியக் கூட்டத்தில் கலந்துகொள்ளும் வாய்ப்புக் கிட்டியது. சுமார் 45 நிமிடங்கள் நடைபெற்ற நிகழ்வில் அவரவர் கருத்துகளைக் கூற ஒவ்வொரு உறுப்பினருக்கும் முதல்வர் அவர்கள் வாய்ப்புக் கொடுத்தார். மாண்புமிகு சத்துணவுத் துறை அமைச்சர் திருமதி.P.கீதா ஜீவன், அரசு முதன்மைச் செயலர் திரு.V.இறையன்பு I.A.S, தனிச் செயலர் Ms.M.J.Anu George I.A.S, துறைச் செயலர் திரு.லால் வீணா I.A.S, ஆணையர் திரு.ஜான் டாம் வர்க்கிஸ் I.A.S போன்றோர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

அவ்வமையம் சென்னையில் நடைபெறவுள்ள 40-வது ஆண்டு சிறப்பு மலர் வெளியீட்டு நிகழ்ச்சியில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலந்துகொள்ள இசைவு தெரிவித்து விட்ட நல்ல செய்தியினை Ms.M.J.Anu George IAS அவர்கள் தெரிவித்தார்.

அமர் சேவா சங்கத்தின் 40-வது ஆண்டு விழாவின் தொடர்ச்சி சென்னையில் GRT Grand Hall-ல் வைத்து தமிழக முதலைமைச்சர் திரு.M.K.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் 25-07-2022 அன்று கொண்டாடப்பட்டு சிறப்பு மலர் வெளியிடப்பட்டது. சிறப்பு விருந்தினர்களாக மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஷ் பொய்யா மொழி, உடல்நலன் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் திரு.மா.சுப்ரமணியன், அறநிலைத்துறை அமைச்சர் திரு.P.K.சேகர்பாபு, சமூக நலத்துறை மற்றும் பெண்கள் மேம்பாட்டுத் துறை அமைச்சர் திருமதி.P.கீதா ஜீவன் ஆகியோர் கலந்துகொண்டனர். மேலும் Lifetime Supporter, Achiever மற்றும் Major Donor 10 அன்பர்களுக்கு விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. மாநில அளவிலான Inclusive Education திட்டத்தில் சமக்ர சிக்ஷா மற்றும் மாநில பள்ளிக்கல்வித் துறையுடன் அமர் சேவா சங்கம் இணைந்து செயலாற்றுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) முதல்வர் முன்னிலையில் ஏற்றுகொள்ளப்பட்டது.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் அமர் சேவா சங்கத்தின் செயல்பாடுகளை வெகுவாகப் பாராட்டிப் பேசினார். இதற்கான முன்முயற்சிகளை மேற்கொண்ட நமது செயலர் பாராட்டுக்குரியவர் ஆவார்.

சிறப்பு மலர் வெளியீட்டு விழா 25-07-2022அன்று நடைபெற்றதையொட்டி சங்கத்திலிருந்து சுமார் 15 அன்பர்கள் பத்து தினங்களுக்கு முன்பு சென்னைக்கு பயணமானார்கள். ஆய்க்குடி திரு.சங்கர் அவர்கள் பொறுப்பில் மயிலாப்பூரில் இயங்கி வரும் V.R Home அறைகளில் தங்கினார்கள். Mount Road, Reheja Tower-ல் இயங்கிவரும் N-Trust நிறுவனத்தின் அலுவலக Hall-ல் அமர் சேவா சங்கத்தின் தற்காலிக முகாம் அலுவலகம் நிகழ்ச்சி முடியும் வரை செயல்பட்டது. V.R Home உரிமையாளர் திரு.V.R.விஸ்வேஸ்வரன் அவர்களுக்கும் காப்பாளர் திரு.சங்கருக்கும் N-Trust நிறுவனத்தின் திரு.S.A.சொர்ணமணி மற்றும் இயக்குநர்களுக்கும் இந்நிகழ்வு வெற்றிகரமாக நடைபெற அரும்பாடுபட்ட திருவாளர்கள் T.பிரகாஷ், T.V.சுப்ரமணியம் போன்ற சங்க உறுப்பினர்களுக்கும், திரு.K.M.சண்முகம், திரு.P.ராமசுப்பிரமணியன், திரு.V.கல்யாணம் மற்றும் பணியாளர்கள், திருமதி.ரமணி சங்கரராமன், திரு.N.வெங்கட்ரமணி போன்ற தன்னார்வத்தொண்டர்களுக்கும், பெங்களூர் திருமதி.ஸ்ரீநிதி போன்ற சங்க நலம் விரும்பிகளுக்கும், GRT Grand நிறுவனத்திற்கும் நமது அழைப்பை ஏற்று வருகை தந்து விருதுகளைப் பெற்றுக்கொண்ட 10 அன்பர்களுக்கும், ஊடகத்துறை அன்பர்களுக்கும் வருகை தந்த நன்கொடையாளர்கள், நலம்விரும்பிகளுக்கும், அரசு செயலர்கள், அதிகாரிகள், பாதுகாப்பைச் சிறப்பாக செய்துகொடுத்த Special Security, காவல் துறையினருக்கும், மேலே குறிப்பிடப்பட்ட அத்துணைபேரையும் சிறப்பாக வழிநடத்திய சங்கச் செயலர் திரு.S.சங்கரராமன் அவர்களுக்கும் நன்றியினையும் பாராட்டுகளையும் உரிதாக்கக் கடமைப்பட்டுள்ளோம். இந்நிகழ்வு சிறப்பாக அமைய ஆரம்பத்திலிருந்து கடைசிவரை நமக்கு பேருதவி புரிந்த மேடம் M.Jஅனு ஜார்ஜ் I.A.S, அவர்களுக்கும், அவர்களது அலுவலக உதவியாளர்களுக்கும் சிறப்பு நன்றியைத் தெரிவிப்பது நமது கடமை.

28-07-2022 சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கில் நடைபெற்ற Internationl Chess Olympiad தொடக்க விழாவில் மாண்புமிகு பிரதமர், முதல்வர், மத்திய-மாநில விளையாட்டுத் துறை அமைச்சர்கள், சர்வதேசப் பிரதிநிதி ஆகியோர் பங்கேற்றனர். இந்த பிரம்மாண்டமான நிகழ்ச்சியில் அடியேனும், செயலரும் கலந்துகொண்டோம். 26-07-2022 அன்று தமிழக பாஜக தலைவர் திரு.K.அண்ணாமலை I.P.S, அவர்களிடம் பிரதம மந்திரியைச் சந்திக்கக் கோரிக்கை வைத்தோம். 29-07-2022 அன்று அண்ணா பல்கலைக் கழக வளாகத்தில் மாண்புமிகு தமிழக ஆளுநர் முன்னிலையில் காலை 11.45 மணிக்கு அடியேனும், செயலரும் மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு.நரேந்திரமோடி அவர்களைச் சந்திக்கும் பாக்கியம் பெற்றோம். எல்லாம் அவன் செயல். FCRA Renewal கோரிக்கையை அவருடைய கவனத்திற்குக் கொண்டுசென்றோம். மேலும், சங்கத்தின் செயல்பாடுகளைப் பார்வையிடவும், டெல்லியிலோ, ஆய்க்குடியிலோ நடைபெறவுள்ள 40-வது ஆண்டு விழா தொடர் நிகழ்ச்சியில் தலைமையேற்றுச் சிறப்பிக்கவும் அழைப்பு விடுத்தோம். EI Project-ஐ எல்லா மாநிலங்களிலும் அமல்படுத்திட வேண்டியதின் அவசியத்தையும், மாற்றுத்திறனாளிகளுக்கு

பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்தினோம்.

தமிழகத்தின் முன்னாள் சுகாதாரத் துறை அமைச்சர் 95 வயது நிரம்பிய பெரியவர் திரு.ஹண்டே அவர்களையும் அங்கு சந்தித்தோம்.

இதனைத் தொடர்ந்து FCRA Registration புதுப்பிக்கப்பட்டு நமக்கு அடுத்த 5 ஆண்டுகளுக்கு மத்திய உள்துறை அமைச்சகத்தால் அனுமதிக்கப்பட்டுள்ளது என்ற நல்ல செய்தியும் 09-09-2022 அன்று கிடைத்தது. இத்தருணத்தில் மத்திய அரசுக்கு நமது நன்றியைத் தெரிவித்துக்கொள்வோமாக.

மார்ச் 23-லிருந்து 26 வரை டில்லியில் Lalith Hotel-ல் நாமும் திரு.S.சங்கரராமனும், உதவியாளர்களும் தங்கி FCRA Renewal சம்பந்தமாக பத்திரிக்கையாளர் திரு.மாதவன் அறிமுகத்தின் பேரில் மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் திருமதி.நிர்மலா சீதாராமன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மீனவர் நலத்துறை அமைச்சர் Dr.L.முருகன், பாராளுமன்ற உறுப்பினர் Ms.கனிமொழி, ராஜ்யசபா உறுப்பினர் திரு.G.K.வாசன், Tele Communication துறைச் செயலாளர் திரு.ராஜாராம் I.A.S. நிதித்துறைச் செயலர் திரு.சோமநாதன் I.A.S., Home Ministry FCRA, Joint Secretary, FCRA Office Director திரு.ஜோஷி, திரு.V.K.சிங், திரு.D.R.கார்த்திகேயன் I.P.S., நிதி அமைச்சரின் Personal Secretary இருவர் போன்றோரைச் சந்தித்து நமது பணிவான கோரிக்கையை முன்வைத்தோம். திரு.பினய்குமார் I.A.S.அவர்களை நேரில் சந்திக்க முடியாவிட்டாலும் அவர் மூலம் சில அறிமுகங்களைப் பெற்றது பயனுள்ளதாகயிருந்தது. திருமதி.நிர்மலா சீதாராமன் அவர்களை Parliament House-ல் அவருக்கு ஒதுக்கப்பட்டிருந்த அறையில் சந்தித்தபோது ராஜஸ்தானின் முன்னாள் முதல்வர் திருமதி.விஜய்ராஜ் சிந்தியா அவர்களை அறிமுகப்படுத்தியது குறிப்பிடத்தக்கது.

31-07-2022 அன்று மாண்புமிகு தமிழக விளையாட்டுத் துறை அமைச்சர் திரு.மெய்யநாதன், பாராளுமன்ற உறுப்பினர் திரு.R.ராஜா ஆகியோரைச் சந்தித்தோம். சென்னை மைலாப்பூரிலுள்ள Clarke School for Deaf and Dumb-ஐ பார்வையிட வாய்ப்புக் கிட்டியது. அடியேனது குருநாதர் ஸ்ரீஸ்ரீஸ்ரீ கிருஷ்ணபிரேமி மஹராஜ் அவர்களையும் தரிசித்து ஆசிபெற்றோம்.

மாற்றுத் திறனாளிகள் நலத்துறையால் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மாற்றுத் திறனாளிகள் அனைவரையும் சென்றடையும் வகையிலும், துறையின் நடவடிக்கைகளை வட்டார மற்றும் உள்ளூர் அளவில் விரிவுபடுத்தும் நோக்கத்திலும் ரூ.1702/- கோடி உலக வங்கி உதவியுடன் 'ரைட்ஸ்' திட்டம் பைலட் Study-ஆக ஐந்து மாவட்டங்களில் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. நமது முன்னாள் பணியாளர்கள் திருவாளர்கள். M.சங்கர் சகாயராஜ், S.அரவிந்த் பரத்வாஜ் இருவரும் சென்னை ஆணையர் அலுவலகத்தில் திட்டமிடும் பிரிவில் Project Manager மற்றும் Project Offcer-ஆகவும் திரு.K.திருமூர்த்தி திருவண்ணாமலை மாவட்ட ஒருங்கிணைப் பாளராகவும் பணியாற்றி வருகின்றனர்.

ISO Internal and External Audit நடத்தப்பட்டு வருகிறது. இந்த வருடம் Virtual மூலமாக 04-07-2022 முதல் 06-07-2022 வரை BSI External Audit நடத்தப்பட்டது. 2025 வரை Certificate Renewal கொடுக்கப்பட்டுள்ளது.

அரசு விதிமுறையின் அடிப்படையில் கட்டட அங்கீகாரம் பணிகளில் தேக்க நிலையில் இருப்பது தெரியவருகிறது. Kulkarni, GIC, EI, BrohMos Unit, MTU Extension, Foster Care-பிளாக் போன்றவற்றிற்குக் கட்டட அங்கீகாரம் இல்லாமல் இருக்கின்றது. அதற்கான வேலைகளை முனைப்புடன் செயல்படுத்திட வேண்டும்.

நமது வளாகத்திலுள்ளோர் அனைவரையும், அனைத்து விலங்கினங்கள் ஜீவராசிகளையும் காத்து ரட்சிக்கும் ஸ்ரீ அமர் விநாயகர் கோவிலில் வருஷாபிஷேகம் - எளிய முறையில் நடைபெற்றது.

காந்தி ஜெயந்தியையொட்டி 02-10-2021 அன்று காலை 6.00 மணியிலிருந்து 03-10-2021 காலை 8.00 மணி வரை அகண்டநாமம் பூஜை சிறப்பாக நடைபெற்றது.

20-11-2021 அன்று திரு.நடராஜன் அவர்களின் தலைமையில் REC வளாகத்தில் வைத்து பஜனை நடைபெற்றது. இதில் பக்திப் பாடகர் திரு.வீரமணி ராஜூ அவர்களின் ஐயப்ப பஜனை மற்றும் லட்சார்ச்சனை நடைபெற்றது.

அமர் சேவா சங்கம் சாரதாம்பாள் தொழிற்பயிற்சிப் பிரிவின் உபகரணங்கள் திறப்பு விழா 18-04-2022 அன்று நடைபெற்றது. திரு.சஞ்சய்குமார் அகர்வால், தலைமை நிர்வாக இயக்குனர், M/s.Antrix Coporation Ltd., பெங்களூர், தலைமை விருந்தினராக திரு.R.கிருஷ்ணராஜ் IPS, காவல்துறை கண்காணிப்பாளர், தென்காசி மாவட்டம், சிறப்பு விருந்தினராக Dr.அஜீத் T.கல்காத்ஜி (Dr. Ajit T Kalghatgi), தலைவர், CSR கமிட்டி, M/s.Antrix Corporation Ltd., திரு.திருமலைக்குமார். ATO, DSTO, திருநெல்வேலி ஆகியோர் கலந்துகொண்டு விழாவினைச் சிறப்பித்தார்கள்.

இரண்டு ஆண்டுகளுக்குப் பின்பு பணியாளர்களின் ஆண்டுவிழா மிகச் சிறப்பாக 26-06-2022 அன்று நடைபெற்றது. தலைமை விருந்தினர்களாக திரு.N.வெங்கட்ரமணி, Dr.மாலதி வெங்கட்ரமணி கலந்துகொண்டார்கள். சிறப்பு விருந்தினர்களாக குற்றாலம் ஓம் பிரணவா ஆஸ்ரம் திரு.விஸ்வநாதன், கோயம்புத்தூர் திருமதி.விஜயலெட்சுமி, திரு.சந்திரசேகர் ஆகியோர் கலந்துகொண்டனர். பல்வேறு போட்டிகள், கலைநிகழ்ச்சிகளில் கலந்துகொண்ட பணியாளர்கள், வாழ்க்கைத்துணை, குழந்தைகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

சங்கத்தின் 40-ஆவது ஆண்டு விழாவின் தொடர்ச்சியாக செயலர் மற்றும் அவரது துணைவியார் முழு கவனம் செலுத்திவரும் அமர் அப்துல்கலாம் மறுவாழ்வு பழத்தோட்டம் திறப்புவிழா 10-07-2022 அன்று நடைபெற்றது. திரு.மா.சுப்பிரமணியன், உடல் நலன் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர், தமிழ்நாடு அரசு, தலைமை விருந்தினராகக் கலந்துகொண்டு திறந்து வைத்தார். சிறப்பு விருந்தினர்களாக தென்காசி பாராளுமன்ற உறுப்பினர் திரு.M.தனுஷ்குமார், தென்காசி சட்டமன்ற உறுப்பினர் திரு.S.பழனி நாடார் மற்றும் சிறப்பு அழைப்பாளர்களாக கடையநல்லூர் திமுக மாவட்டச் செயலாளர், திரு.M.செல்லத்துரை, திருநெல்வேலி மாவட்டச் செயலாளர் திரு.சிவபத்மநாபன், ஆய்க்குடி பேரூராட்சித் தலைவர், திரு.G.சுந்தர்ராஜன், தென்காசி பிளாக் சேர்மன் திரு.P.ராமையா, செங்கோட்டை பிளாக் சேர்மன் திரு.A.ரவிசங்கர் மற்றும் இலத்தூர் ஊராட்சி மன்றத் தலைவர்,

திருமதி.P.தமிழ்செல்வி, இளைஞர் அணி அமைப்பாளர் திரு.P.ஆறுமுகசாமி மற்றும் கட்சிப் பிரமுகர்கள் ஆகியோர் கலந்துகொண்டு விழாவினைச் சிறப்பித்தார்கள். மார்ச் 31 அன்று சென்னையில் மாண்புமிகு சுகாதாரத்துறை அமைச்சர் திரு.மா.சுப்ரமணியம் அவர்களை நாமும் அருகிலுள்ள Fibre Factory உரிமையாளர் திரு.V.சுப்ரமணியம் அவர்களும் நேரில் சந்தித்தோம். அவ்வமையம் திரு.V.சுப்ரமணியம் அவர்கள் தென்காசி மாவட்டத்தின் அரசு மருத்துவக்கல்லூரி அமைய தனக்கும், தனது குடும்பத்தாருக்கும் பாத்தியப்பட்ட ஆய்க்குடி-தென்காசி சாலையிலுள்ள 18 ஏக்கர் நிலத்தை தமிழக அரசுக்கு தானமாக வழங்க விருப்பம் தெரிவித்து மனு ஒன்றை அமைச்சர் அவர்களிடம் சமர்ப்பித்தார். ஜுலை 10-ம் தேதி சங்க நிகழ்ச்சிகளை முடித்துக்கொண்டு இரவு 9.30 மணிக்கு அவ்விடத்தை அமைச்சர் அவர்கள் பார்வையிட்டார். மத்திய அரசின் ஒப்புதல் பெற்றவுடன் ஆவன செய்வதாகத் தெரிவித்தார். மாவட்ட ஆட்சியர் திரு.P.ஆகாஷ் I.A.S. அவர்களும், வருவாய்த் துறை அதிகாரிகளும் அவ்விடத்தை செப்டம்பர் மாதம் பார்வையிட்டனர்.

இந்திய அளவில் சிறந்த செயல்திறன் தரவரிசையில் நமது ITI மாணக்கர்கள் ஏழு நபர்கள் சாதனை புரிந்தது மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகிறது. இதற்கான பாராட்டு விழா சென்னையில் வைத்து 17-09-2022 அன்று நடைபெற்றது. இவ்விழாவில் நமது செயலரும், சாதனை புரிந்த நமது மாணக்கர்களும் கலந்துகொண்டனர். மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.கணேசன் மற்றும் அரசு அதிகாரிகள் பங்கு கொண்டு சிறப்பு செய்தனர்.

கனடா Handi Care International அமைப்பும், அதன் தலைவர் திருமதி.சுலோசனா கிருஷ்ணமூர்த்தி அவர்களும் எடுத்துக்கொண்ட முன்முயற்சிகளாலும், வழங்கிய நல் ஒத்துழைப்பினாலும் சென்னையில் பிப்ரவரி 2020-ல் நடைபெற்ற Early Intervention International Conference சங்கத்தின் 40 ஆண்டுகால வரலாற்றில் மிக முக்கிய நிகழ்வு என்று சொன்னால் அது மிகையாகாது. அமர் சேவா சங்கத்தின் வளர்ச்சிக்கு Handi Care International அமைப்பு 1992-லிருந்து உதவிக்கரம் நீட்டிவருகிறது. EI Conference-ன் போதும், அதற்கு முன்பும், தொடர்ந்து தற்போதும் Dr.தினேஷ் கிருஷ்ணமூர்த்தி, உள்நாடு, வெளிநாடுகளில் நமது வளர்ச்சிப் பாதைக்கு வழிகோலும் விவாதங்களில் தொடர்ச்சியாக Zoom Meeting-மூலம் பங்கேற்று வருவதும் Ms.மரிபிரைன் Online-ல் வகுப்புகள் நடத்தி ஆலோசனை வழங்கி வருவதும் நமக்கு பேருதவியாக உள்ளது. இவர்களுக்கு நமது பாராட்டுகளை உரிதாக்குவோமாக. Dr.தினேஷ் அவர்களை Key Person-ஆகக் கொண்டு நமது Centre of Excellence திட்டத்தை செயலர் மிகுந்த ஆர்வத்துடன் முன்னெடுத்துச் செல்கிறார். இத்திட்ட வளர்ச்சியில் Ms.நவமணி, Mrs.பரமகல்யாணி, திரு.S.ராஜேஸ்வரன் போன்றோர் ஈடுபட்டு வருகின்றனர். C-19 காரணமாக தடைப்பட்டிருந்த USA, Canada University Students in-house training programme செப்டம்பர் மாதத்திலிருந்து மீண்டும் துவங்கியுள்ளது. எல்லாம் அவன் செயல்.

APPI, GCC, Oracle, Omcharity, HCI, SCB, Kone, Gurukrupa, KVR, Voltas போன்ற நிறுவனங்கள் திருவாளர்கள் கல்ராமன், R.P.கிருஷ்சமாசாரி போன்ற தனிநபர்கள் நமது Project-களுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதால் நமது செயல்பாடுகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. அவர்களுக்கு நாம் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளோம்.

பட்டுக்கோட்டையில் சங்கத்தின் well wisher திரு.M.S.ராஜேந்திரன் மிராசு 2 Ground (சுமார் 11 செண்ட்) காலிமனையைச் சங்கத்திற்கு நன்கொடையாக 04.07.2018 அன்று வழங்கியுள்ளார். விரைவில் நமது VBRI EI பணிகள் அப்பகுதியில் ஆரம்பிக்கப்பட வேண்டும். அதற்கான முழுமுயற்சிகளை விரைவில் தொடங்கவேண்டும்.

கடையத்தில் ஜுன் கடைசி வாரம் நடைபெற்ற சென்னை சேவாலயா அமைப்பு ஏற்பாடு செய்திருந்த கவிஞர் பாரதி-செல்லம்மா சிலை திறப்பு விழா மற்றும் நூலக துவக்க விழா நிகழ்ச்சியில் பங்கேற்று பரதநாட்டிய நிகழ்ச்சிகளைக் கண்டுகளித்தோம்.

நமது செயலாளர் திரு.S.சங்கரராமன் அவர்கள் சென்னையில் கல்வித்துறை அதிகாரிகள் திருவாளர்கள் சுதன், நந்தகுமார் ஆகியோரை சந்தித்து உரையாடினார். 12-07-2022-ஆம் தேதி வாசுதேவநல்லூர் சென்று சிவகிரி, புளியங்குடி மேல்நிலைபள்ளிகளில் நடைபெற்ற புதிய கட்டடத் திறப்பு விழாவிற்கு வருகை தந்த மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்களை நேரில் சந்தித்து சங்கத்திற்கு அழைப்பு விடுத்தார். ஆய்க்குடி அகரக்கட்டு சாலையில் அமைந்துள்ள JP கல்லூரி வளாகத்திற்கு வருகை தந்த அமைச்சர் தலைமையில் இந்த வட்டாரத்திலுள்ள அரசு பள்ளிகளுக்கான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. அதற்கு வருகை தந்த பள்ளிக் கல்வித்துறை ஆணையர் Dr.நந்தகுமார் சங்கத்திற்கு விஜயம் செய்து சுற்றிப் பார்த்து செயலாளர் S.சங்கரராமன் Screen-ல் காட்டிய நமக்கும் கல்வித்துறைக்குமான MOU பற்றிய விவரங்கள் அடங்கிய Power Point Presentation-ஐ பார்வையிட்டு பாராட்டினார்.

சுந்தரபாண்டியபுரம் திரு.N.ராஜகோபாலன் @ சாய்கண்ணன் அவர்களின் அறிமுகத்தின் பேரில் கேரளா மாநிலம் கொல்லம் மாவட்டத்தைச் சார்ந்த விஜயனந்தா சுவாமிகள் சங்கத்திற்கு 21-07-2022 அன்று விஜயம் செய்தார். ஆய்க்குடி ஸ்ரீ பாலமுருகனை தரிசித்தார், சாந்தம் மூத்த குடிமக்கள் இல்லத்தினையும் பார்வையிட்டார்.

26.07.2022 காலை 10.30 மணிக்கு மெட்ராஸ் IIT வளாகத்திற்கு நாமும் சங்கரராமனும் சென்று அதன் இயக்குநர் Prof.Dr. காமகோடி அவர்களைச் சந்தித்து உரையாடினோம். விரைவில் ஆய்க்குடி வருவதாக உறுதியளித்தார். சங்கத்தில் நடைபெற்று வந்த IGNOU Special Study Centre கடந்த இரண்டு ஆண்டுகளாக செயல்படாமல் முடங்கி போய் இருப்பதை அவரது கவனத்திற்கு கொண்டு வந்தோம். மீண்டும் செயல்பட IGNOU இயக்குநருக்கு கோரிக்கை மனுவை அனுப்பி விட்டு நகலை தமக்கு அனுப்புமாறு கூறினார். தமிழகம் முழுவதும் 108 Coaching Center-களில் ஒன்று ஆய்க்குடியில் அமைக்க விரும்புவதாகவும் தெரிவித்தார். IIT பேராசிரியர் முரளிதரன், திருமதி.ரமணி சங்கரராமன், திரு.K.M.சண்முகம் ஆகியோர் உரையாடலில் கலந்துகொண்டார்கள்.

26.07.2022 மதியம் 1.00 மணியளவில் தி.நகர் கமலாலயத்திற்கு நாமும் சங்கரராமனும், திருமதி. ரமணி சங்கரராமனும், திரு.K.M.சண்முகம், M.சுரேஷ் ஆகியோர் சென்று தமிழ்நாடு BJP தலைவர் திரு.அண்ணாமலை அவர்களை சந்தித்து சங்கத்திற்கு அழைப்பு விடுத்தோம். 28.07.2022 அன்று சென்னையில் நடைபெறும் International Chess

Olympiad துவக்க விழாவிற்கு வருகை தரும் மாண்புமிகு பாரதப்பிரதமர் திரு.நரேந்திரமோடி அவர்களைச் சந்திக்க வாய்ப்பை ஏற்படுத்தி தரும்படியும், அவரை சங்கத்திற்கு அழைத்து வர ஏற்பாடு செய்ய வேண்டியும் கேட்டுக் கொண்டோம்.

27.08.2022 அன்று நாமும் உதவியாளர்கள் ஆறுமுகம், நாகராஜ் மூவரும் வேனில் புறப்பட்டு காந்தி கிராமத்தில் 30 நிமிடங்கள் தங்கி நிர்வாகிகள் Dr.C.A.சிவகுமார், Dr.பங்கஜம், மேடம் நீலா போன்றோரைச் சந்தித்து உரையாடினோம். பின்னர் அன்றிரவு 7 மணியளவில் சேலம் வாழப்பாடி வட்டம் அனுப்பூர் சென்றடைந்து தமிழ்நாடு Spinal Injured Persons Association (SIPA) ஏற்பாடு செய்திருந்த ஆண்டு பொதுகுழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றினோம். ஓரிரு மாவட்டங்கள் தவிர அனைத்து மாவட்டங்களிலிருந்தும் பிரதிநிதிகள் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது. மறுநாள் 28 அன்று SCI அன்பர்களுக்கு மறுவாழ்வு பயிற்சி அளிக்கும் வண்ணம் வடிவமைக்கப்பட்டுள்ள சேலம் சேவா சங்கம் (திருவாளர்கள் சக்திவேல், குமாரவேல் மற்றும் அவரது துணைவியாரை Trustee-ஆகக் கொண்ட அமைப்பு) திறப்புவிழா நிகழ்ச்சியில் நாமும் சேலம் உதவிக்கரம் மாற்றுத்திறனாளிகளுக்கான நல்வாழ்வுச் சங்க அமைப்பின் பொறுப்பாளர் திரு.அத்தியண்ணன், திரு.வெங்கட்ராமன் மற்றும் பல சேலம் பிரமுகர்கள் கலந்து கொண்டு Trustee-களையும் இதற்கு முன்னர் இவ்விடத்தில் இயங்கி வந்த ஆதவ் trust அன்பர்கள் இயல், இசை, வல்லவி, late வானவன் மாதவி அவர்களது பெற்றோர் மற்றும் அமர் சேவா சங்க உறுப்பினராக செயல்பட்ட சகோதரிகளின் அத்தை late Ms.அருள்மொழி ஆகியோரையும் பாராட்டிப் பேசினோம். மரக்கன்றுகள் நட்டோம். அரசு மருத்துவர் Dr.ரூபேஷ் உதவியுடன் மாவட்ட ஆட்சியர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான நல அலுவலர் ஆகியோரைச் சந்தித்து பல்வேறு விஷயங்கள் குறித்து விவாதித்தோம். செல்வி. இயல், இசை, வல்லவியையும் அவரது பெற்றோரையும் வீட்டில் சந்தித்து ஆறுதல் கூறி, மீண்டும் சுறுசுறுப்பாக இயங்கும் படி விண்ணப்பித்தோம். ஆகஸ்ட் 30ம் தேதி சேலத்திலிருந்து புறப்பட்டு உடுமலைப் பேட்டை சென்று காஞ்சி பிளாக்கில் மறுவாழ்வு பெற்ற சகோதரர் ஜானகிராமன் மற்றும் திருப்பூர் நண்பர் லலித்குமார் போன்றோர் முன் முயற்சியில் ஆரம்பிக்கப்பட உள்ள SCI அன்பர்களுக்கான மறுவாழ்வு மையத்தை பார்வையிட்டோம். உடுமலை பேட்டையில் உள்ள பல முக்கிய பிரமுகர்கள் அங்கு நம்மை சந்தித்தது மகிழ்ச்சியாக இருந்தது.

GCT கல்லூரி Senior MELSS திரு. சீனிவாச அண்ணா அவர்களின் அழைப்பின் பேரில் வால்பாறை எஸ்டேட் சென்று அவருடன் இரவு தங்கினோம். 31.08.2022 அன்று அருகிலுள்ள உருளிக்கல் எஸ்டேட் சென்று அவரது குலதெய்வமான ஸ்ரீ ஆதி விநாயகரை தரிசித்ததோடு, School for Special Children-ஐயும் பார்வையிட முடிந்தது. வால்பாறை எஸ்டேட்-ல் உள்ள மாற்றுத்திறனாளி குழந்தைகள் மற்றும் அன்பர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டுமென்பதை உணர்ந்தோம். அன்று மாலை கிணத்துகடவுக்கு அருகாமையிலுள்ள தேவர்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள வேதாந்தா பிருந்தாவன் Senior Citizen Home சென்று அங்குள்ள பெரியவர்களிடம் சங்கம் பற்றிய செய்தினைப் பகிர்ந்து கொண்டோம்.

கோவையில் 02.09.2022 அன்று மதியம் தியானபிரஸ்தா மற்றும் நானா-நானி phase 4 ஆகிய மூத்த குடிமக்களுக்கான அமைப்பினைப் பார்வையிட்டோம்.

3ம் தேதி காலை கோவையிலிருந்து சென்னை செல்லும் வழியில் 25 ஆண்டுகளாக கோவில்பாளையத்தில் நடைபெற்று வரும் SCI அன்பர்களுக்கான மறுவாழ்வு மையம் Sahai, சாலையூர் கிராமத்தில் திரு.R.ரவிசந்திரன் நடத்தி வரும் SCI அன்பர்களுக்கான மறுவாழ்வு மையம், வடுகபாளையம் அனுகிரஹா மற்றும் குறும்பபாளையம் United Home முதியோர் இல்லம் ஆகியவற்றை பார்வையிட்டோம்.

07.09.2022 அன்று நாமும் K.M.சண்முகமும் சென்னை Beach ரோட்டில் அமைந்துள்ள மாற்றுத்திறனாளிகள் நலத்துறை ஆணையர் அலுவலகத்திற்கு சென்று ஆணையர் திருமதி.ஜெஸிந்தா I.A.S அவர்களை சந்தித்து அரசிடமிருந்து சங்கத்திற்கு வரவேண்டிய நிலுவைத் தொகை குறித்து விவாதித்தோம்.

09.09.2022 அன்று சென்னையிலிருந்து ஆய்க்குடி புறப்படும் போது GRT Grand Hotel-ல் ஜெர்மனி Union Island சகோதரி திருமதி.பவானி லஷ்மி மற்றும் அவரது தோழி மலேசியா Psychologist Ms.Sitra மற்றும் hotel அன்பர்களைச் சந்தித்தோம்.

நமது நன்கொடையாளரும், நலம் விரும்பியும், சமூக ஆர்வலர் மற்றும் பயிற்றுனருமான CA.S.சங்கரன், திருமதி.பத்மா அவர்களுடைய சொந்த இல்லம் சென்னை மந்தவெளி 1st Trust மெயின் ரோட்டில் அவர்கள் விருப்பம் மற்றும் அனுமதியின் பேரிலும் கடந்த ஓராண்டுகாலமாக சென்னை செல்லும் போதெல்லாம் அங்குதான் தங்கி வருகிறோம். தேவையான வசதிகளை செய்து கொடுத்த அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளோம்.

சென்னை 1234 Foundation அமைப்பிலிருந்து சுமார் 15 பயிற்சியாளர்களும், ஓரிரு குடும்பத்தாரும் செப்டம்பர் 3வது வாரம் மூன்று தினங்கள் சங்க Guest house-ல் தங்கி பள்ளி மாணவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் பெற்றோர், ஆசிரியப் பெருமக்கள், பணிபுரியும் அன்பர்கள் போன்றோருக்கு பயிற்சி பட்டறைகளை நடத்தியது பயனுள்ளதாக இருந்தது.

19-09-2022-ஆம் தேதி மாண்புமிகு பாரத பிரதமர் திரு.நரேந்திரமோடி மற்றும் திரு.ஈ.வே.ரா.பெரியார் அவர்களுடைய பிறந்த தினம். இதையொட்டி திரு.அர்ஜுன் சம்பத் அவர்கள் சங்கத்திற்கு வருகை தந்து அவர் எழுதிய புத்தகத்தை அன்பளிப்பாக வழங்கினார்.

திருமதி. தைலாம்பாள் அவர்களின் மறைவை அடுத்து அவரது மூத்த புதல்வியார் Canada HCI அமைப்பின் தலைவர் திருமதி Sulochana Krishnamoorthy அவர்கள் செப்டம்பர் 3ம் தேதி சங்கத்திற்கு வருகை தந்து 20 தினங்கள் தங்கினார்கள்.

Amarseva Global Association, Amar Foundation, Advisory Board போன்றவற்றின் கூட்டங்களும் Foster Care Parents அமைப்பின் ஆய்வுக் கூட்டமும் நடத்தப்பட வேண்டும்.

கடையம் Late.Dr.கணேசன் ஐயர், Late சங்கரன் ஐயர் குடும்பத்தார் வாரிசுகளுக்கு பாத்தியப்பட்ட காலிமனையை சங்கத்திற்கு நன்கொடையாக பெற்றுகொள்வது சம்பந்தமாக திரு.சண்முகம், திரு.முப்பிடாதி உட்பட நாங்கள் மூவரும் 13-09-2022 அன்று மாவட்ட ஆட்சியரிடம் நேரில் சென்று அறிவுரை பெற்றோம். HCI President திருமதி.சுலோசனா கிருஷ்ணமூர்த்தி அவர்களும், செயலர்.S.சங்கரராமன், Co-ordinator Ms.நவமணியும் மறுநாள் மாவட்ட ஆட்சியர் அவர்களைச் சந்தித்து Dist. Early Intervention Centre செயல்பாடுகள் மற்றும் அவசியம் குறித்து விவாதித்தனர்.

ராஜபாளையம், ராம்கோ சிமிண்ட் நிறுவனம் நம்முடைய கட்டட வேலைகளுக்காக 7000 சிமெண்ட் மூடைகளை நன்கொடையாக வழங்கியது. நமது பள்ளியின் கட்டுமானப் பணி (Phase 3 & 4), Compound wall, PAC-Roof tiles, Toilet Renovation, RPSNC building, Kambli Store Room மற்றும் MG block toilet போன்ற பணிகளுக்கு அவற்றைப் பயன்படுத்தியுள்ளோம். தொடர்ந்து கட்டடப் பணிகளிருப்பதால் மீண்டும் ராம்கோ நிறுவனத்திடம் சிமிண்ட் நன்கொடையாகக் கேட்கவேண்டும் என தீர்மானிக்கப் பட்டுள்ளது.

C-19க்குப் பின்பு பணியாளர்களுக்கு அவர்களுடைய திறன்களில் மேன்மையடைய அவ்வப்பொழுது பயிற்சிகள் சங்க வளாகத்திலும், வெளி இடங்களிலும் அளிக்கப்பட்டு வருகிறது.

Readers Club of Virudhunagar, Rotary Club of Virudhunagar, Idhayam, Tamerica TV, 1234 Foundation, Trainer திரு.M.ஹரிஹரமகாதேவன் மற்றும் அமர் சேவா சங்கம் ஆகியோர் இணைந்து 2021 ஜூலை மாதம் முதல் ஒவ்வொரு சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு Live with Bliss and Peace நேரலை நிகழ்ச்சியில் சங்கத்தில் பணிபுரியும் அன்பர்களுடன் அடியேனும் கலந்துகொண்டு பயன்பெற்று வந்தோம். 61 வாரங்கள் ஆளுமை நிறைந்த பல பயிற்சியாளர்களைக் கொண்டு நடத்தப்பட்ட இந்தத் தொடர் நிகழ்ச்சியின் நிறைவு விழா 06-09-2022 அன்று நடைபெற்றது. திரு.ஹரிஹர மகாதேவன் அவர்களின் முயற்சி அனைவராலும் பாராட்டப்பட்டது.

Early Intervention-ல் (0-6 வயது வரம்பு) ஆரம்பித்து பள்ளிப் பருவம், கல்லூரிப் பருவம், வருவாய் ஈட்டும் மற்றும் குடும்பத்தை நிர்வகிக்கும் பருவம், முதுமைப் பருவம் என மாற்றுத் திறனாளிகளின் நலனில் எவ்வாறு அக்கறை செலுத்த வேண்டும், இதில் அமர் சேவா சங்கத்தின் பங்கு என்ன? மாநில, மத்திய அரசின் பங்கு என்ன? மாவட்ட நிர்வாகம் மற்றும் பஞ்சாயத்துகளின் பங்கு என்ன? பொது மக்கள், வேலை வாய்ப்பு அளிக்கும் நிறுவனங்கள், கல்வி மற்றும் போக்குவரத்து நிறுவனங்கள் போன்ற அமைப்புகளின் பங்கு என்ன? என்பன பற்றியெல்லாம் கருத்துக்கணிப்பு நடத்தப்படவேண்டும்.

திருவாளர்கள் TAP வரதகுட்டி, பாண்டிச்சேரி Dr.சிதம்பரம், புதுக்கோட்டை பேராசிரியர் திரு.பொன் கதிரேசன் போன்றோர் Congrigation for Persons with disability (DPOs & NGOs) என்ற அமைப்பை ஆகஸ்ட் 2022-ல் உருவாக்கியுள்ளார்கள். வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமை மாலை 6.45 மணியிலிருந்து 8.30 மணிவரை zoom-ல் கருத்து பரிமாற்றம் நடைபெற்று வருகிறது. அனைத்து மாற்றுத்திறனாளிகளும் அவரவர் கருத்துகளை இக்கூட்டத்தில் கொண்டு வரலாம்.

**<u>விருதுகள்</u>**

தலைவர் திரு.S.ராமகிருஷ்ணன் அவர்களுக்கு மாற்றுத்திறனாளிகளுக்குச் செய்துவரும் மகத்தான சேவையைப் பாராட்டி ஜனாதிபதி திரு.ராம்நாத் கோவிந்த் அவர்களின் திருக்கரங்களால் பத்மஸ்ரீ விருது 08-11-2021 அன்று வழங்கப்பட்டது.

தொடர்ந்து 7-வது முறையாக 15.05.2022 அன்று நடைபெற்ற பெங்களூர் மாராத்தானில் கலந்துகொண்டதைத் தொடர்ந்து, 22.07.2022 அன்று Bangaluru-வில் அமர் சேவா சங்கத்திற்கு வழங்கப்பட்ட Second Top Fundraiser என்ற விருதினை அமர் சேவா சங்கத்தின் சார்பாக நமது பணியாளர்கள் திரு.தீபக்லால் மற்றும் திரு.A.கௌசிக் ஆகியோர் பெற்று வந்தனர்.

**இரங்கல் செய்தி**

நமது நோட்டுப்புத்தக உற்பத்தி பிரிவு பணியாளர் திரு.A.அமீர்பாபு 24-06-2021 அன்றும் ‘சாதனைப் படைக்கும் சக்கர நாற்காலிகள்’ என்ற தலைப்பின்கீழ் அமர் சேவா சங்கத்தைப் பற்றி ஒரு புத்தகத்தை வெளியிட்ட கடலூர் திரு.K.J.ராமநாராயணன் 18-10-2021 அன்றும், பெங்களூர் திரு.Late.A.K.ராமன் அவர்களின் துணைவியார் திருமதி.சசி மாமி அவர்கள் 22-10-2021 அன்றும், அமர் சேவா சங்க நிறுவன தலைவர் திரு.S.ராமகிருஷ்ணன் அவர்களின் தந்தையும், நமது பெதுக்குழு உறுப்பினருமான திரு.R..சிவசுப்பிரமணியன் அவர்கள் 23-11-2021 அன்றும், நமது கமிட்டி உறுப்பினர் பெங்களூர் திரு.கஸ்தூரிரங்கன் அவர்கள் 27-11-2021 அன்றும், முப்படைத் தளபதிகளின் தலைவர் திரு.பிபின் ராவத் அவர்கள் மற்றும் குழுவினர் 08-12-2021 அன்றும், Computer பிரிவு பணியாளர் திரு.M.ஜெகன் 31-12-2021 அன்றும் நமது பொதுக்குழு உறுப்பினர் திரு.C.ஸ்ரீசங்கர் அவர்களின் தாயார் திருமதி.ராஜம் சிதம்பரம் 02-01-2022 அன்றும் திரு.SRM.கண்ணப்பன் அவர்களின் துணைவியார் திருமதி.மீனாட்சியம்மாள் 06-01-2022 அன்றும், நமது முன்னாள் உதவித்தலைவர் மற்றும் கமிட்டி உறுப்பினர் திரு.K.சிதம்பரம் 13-01-2021 அன்றும், நமது முன்னாள் கமிட்டி உறுப்பினர் தஞ்சாவூர் திரு.V.ரஞ்சன் அவர்கள் 19-01-2022 அன்றும், Executive Director, SPIC (Retd.) திரு.K.S.சுப்பையா அவர்கள் 19-01-2022 அன்றும், பெங்களூர் திரு.ராமச்சந்திரன் 20-01-2022 அன்றும், பெங்களூர் திருமதி.ரமா கஸ்தூரிரங்கன் அவர்கள் 16-06-2022, அன்றும் சென்னை Venus Water Heater கம்பெனி பங்குதாரர் திரு.அய்யாத்துரை 04-03-2022 அன்றும், ஹைதராபாத் GCT 76 அன்பர் திரு.ரவிந்திரநாத் சர்மா 05-03-2022 அன்றும், Dr.M.S.சுவாமிநாதன் அவர்களின் துணைவியார் திருமதி.மீனாட்சி சுவாமிநாதன் 14-03-2022 அன்றும், முன்னாள் கமிட்டி உறுப்பினர் Late.திரு.K.சிதம்பரம் அவர்களின் துணைவியார் திருமதி.சீதையம்மாள் 04-04-2022 அன்றும், தினமலர் நிறுவனர் டி.வி.ஆர். அவர்களின் மூத்த மகன் Dr.R.வெங்கடபதி 11-04-2022 அன்றும், ‘வானம் வசப்படும்’ நிறுவனர் விஸ்வம் நடராஜ் 23-7-2022 அன்றும், நமது செயலர் திரு.எஸ்.சங்கரராமன் அவர்களின் தாயார் திருமதி.S.தைலாம்பாள் 01-08-2022 அன்றும், நமது நன்கொடையாளரும், நலம் விரும்பியுமான Modern Refractory, விசாகப்பட்டினம் திரு.PKA.நாராயன் அவர்களின் மகன் திரு.தீபக் நாராயன் 10-08-2022 அன்றும், கோயம்புத்தூர் GCT கல்லூரி Physics Prof.திரு.K.S.கிருஷ்ணமூர்த்தி 01-09-2022 அன்றும், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஒருங்கிணைப்பாளர் முனைவர் திரு.பொன் கதிரேசன் அவர்களின் 10-வயது நிரம்பிய மூத்த மகன் பொன்.க.வெற்றித்தமிழ் 15-09-2022 அன்றும் சென்னை Capt.T.வேணுகோபால்-திருமதி.சாந்தி தம்பதியரின் 32-வயது நிரம்பிய புதல்வி சௌமியா 23-09-2022 அன்றும் இறைவனது திருவடி சேர்ந்தார்கள் என்பதை மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

நமது செயல்பாடுகள் சங்கத்திற்கு விஜயம் செய்யும் பல நல்ல உள்ளங்களாலும், நமது இணையதளத்தைப் (website) பார்வையிடும் சகோதர, சகோதரிகளாலும், பத்திரிகைகள், தொலைக்காட்சிகள் போன்றவற்றில் நமது நிகழ்வுகளைக் காணும் அன்பர்களாலும் வெகுவாகப் பாராட்டப்படுகின்றது. செயலர், CSR Cell, மக்கள் தொடர்புப் பிரிவு மற்றும் The Amar Foundation, நமது சங்கத்தின் நிதிநிலையை உயர்த்துவதில் காட்டும் விடாமுயற்சி, மேற்கொள்ளும் பல்வேறு திட்டங்கள் பல சமூக சேவை நிறுவனங்களுக்கும் வழிகாட்டியாக அமைகிறது.

ஆய்க்குடியின் பிரதான தெய்வமான ஸ்ரீபாலசுப்ரமணிய சுவாமி மற்றும் பல்வேறு மதத்தவர் வழிபடும் தெய்வங்களின் அனுக்கிரஹத்தாலும், பல குருமார்களின் கிருபையாலும், பல நல்லிதயங்கொண்ட பெரியோர்களின் ஆசிகளாலும், பல அரசியல் பிரமுகர்களின் வருகையாலும், பல உள்நாட்டு, வெளிநாட்டு நிதி நிறுவனங்கள், பெரு நிறுவனங்கள், தொழிலதிபர்கள், தனிநபர்கள் வழங்கும் நன்கொடையாலும், நன்கொடை திரட்டி உதவும் மற்றும் நாம் ஆங்காங்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளும்பொழுது உணவு, உறைவிடம், வாகன வசதிகளை செய்து தரும் நலம்விரும்பிகளின் கருணையாலும், மத்திய-மாநில அரசின் பல்வேறு துறைகள், குறிப்பாக மாற்றுத்திறனாளிகளுக்கான நல்வாழ்வுத் துறை, ரோட்டரி, லயன்ஸ், ஜேசிஸ், மெசானிக், வாழும் கலை, மனவளக் கலை, நம்மைப் போன்ற பல தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், நிலம் வாங்குவதற்கு உதவுவோர், மற்றும் பல்வேறு ஊடகங்களின் தொடர் ஒத்துழைப்பினாலும், பொதுக்குழு, செயற்குழு, நிதிஆய்வுக் குழு, மாவட்ட ஆட்சியர் தலைமையிலான அறிவுரைக்குழு உறுப்பினர்கள், நமது முன்னாள் இன்னாள் Patron-in-Chief, Patrons, வழிகாட்டுதலாலும், தன்னார்வத் தொண்டர்கள் மற்றும் பணிபுரியும் அன்பர்களின் இடைவிடாத உழைப்பினாலும், மாற்றுத்திறனாளர் சகோதர, சகோதரிகள் மற்றும் பொதுமக்கள் நமது சேவையினை விழிப்புணர்வோடு தமது வாழ்க்கைதரம் மேம்படும் வண்ணம் நன்கு பயன்படுத்தி வருவதாலும் நிர்வாகம் சார்ந்த மறுவாழ்வுப்பணி (Institution Based Rehabilitation) மற்றும் கிராமம் சார்ந்த மறுவாழ்வுப் பணிகள் (Village Based Rehabilitation) செவ்வனே செயல்பட்டு வருகின்றன.

ஆரம்பகாலத்தில் அமர் சேவா சங்கம் உருவாவதற்கு உறுதுணையாயிருந்த அடியேனது பெற்றோர், உடன்பிறப்புகள், உறவினர்கள், மற்றும் உள்ளூர் அன்பர்கள், எனது துணைவியார், ஆய்க்குடி அரசு மேல்நிலைப்பள்ளி, ஆழ்வார்குறிச்சி ஸ்ரீபரமகல்யாணி கல்லூரி (SPKC), கோவை அரசு தொழில்நுட்பக் கல்லூரி (GCT) ஆசிரியப் பெருமக்கள் மற்றும் நண்பர்களின் ஆதரவும் பின்னர் சங்கத்தின் செயலாளராக பொறுப்பேற்றுக்கொண்ட CA.S.சங்கரராமன் மற்றும் அவர்தம் குடும்பத்தார், நண்பர்கள் நல்கி வரும் ஆதரவும், Care Giving பணிகளை இன்முகதோடு மனமுவந்து மேற்கொண்டு வரும் அன்பர்களின் ஆதரவும் குறிப்பிடத்தக்கது.

எழுத்தாளரும், சமூக ஆர்வலருமான நமது God Mother சிவசங்கரி அம்மா, ‘‘உச்சி மீது வானிடிந்து வீழுகின்றபோதிலும் அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பது இல்லையே’’ என்ற தலைப்பில் எழுதிய ஐந்து பக்க கவர் ஸ்டோரி 1985 ஜனவரி 27-ஆம் தேதி ஆனந்த விகடன் வார இதழில் வெளியானதும், அதைத் தொடர்ந்து பல ஊடகங்கள் சங்கம் பற்றிய செய்திகளை வெளியிட்டு வருவதும், மத்திய-மாநில அரசுகள் மற்றும் பல்வேறு உள்நாட்டு, வெளிநாட்டு அமைப்புகள் நமது தொண்டினைப் பாராட்டி விருதுகள் வழங்கி வருவதும் குறிப்பிடத்தக்கது. இவை அனைத்தும் மேலே

குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து சாராரின் கூட்டு முயற்சிக்குக் கிடைத்த அங்கீகாரம் என்பதை பணிவோடு சமர்பிக்கின்றோம். "தனிமரம் தோப்பாகாது".

நமக்கெல்லாம் நல்லெண்ணங்களையும், தொலைநோக்குப் பார்வையினையும், திறமையினையும், குறிப்பாக தொண்டுள்ளத்தையும் மேன்மேலும் வழங்கி **Live To Serve** என்ற நமது வாசகத்தை, கொள்கையை அர்த்தமுள்ளதாக்க ஆண்டவன் என்றும் துணைநிற்பாராக!!

சமுதாயத்தின் நலனில் அக்கறை செலுத்த, மாற்றுத்திறனாளர்களுக்கான கட்டமைப்பை உருவாக்குவதில் பங்குபெறச் செய்ய நமக்கு வாய்ப்பு நல்கிவருகிற உலகளாவிய மக்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளோம். மாற்றுத்திறனாளர் ஆகிய நாம் சலுகைகளைப் பெறுவது மட்டும் முக்கியமல்ல. நமது உரிமைகளை, கடமைகளை உணர்ந்து, வசதிகளைப் பெருக்கச் செய்து, சமுதாயத்தோடு நாமும் ஒருங்கிணைந்து கடமையாற்றுவதையே குறிக்கோளாகக் கொள்ளவேண்டும். வசதிகளுக்கு சில உதாரணங்கள் Metro Rail, Lift, நான்கு சக்கரங்கள் பொருத்தப்பட்ட ஸ்கூட்டர். கைகளாலேயே இயக்கும் வண்ணம் வடிவமைக்கப்பட்டுள்ள Break, Accelerator, Auto, Wheelchair cum Tricycle, தொடு உணர்வால் இயங்கும் Motorized Wheel Chair. முயன்றால் முடியாதது எதுவுமில்லை. நமது திறமை அனைத்தையும் ஒருமுகப்படுத்தி செயல்படுவோமானால் கண்டிப்பாக சோதனைகளை மீறி நம்மால் சாதனைகளைப் படைக்க முடியும். அனைத்து தரப்பினரும் நமது தேவைகளைப் புரிந்து கொள்ளும்வண்ணம் அதற்கான விழிப்புணர்வு திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்திட வேண்டும்.

எல்லோரும் எல்லா நலன்களும் பெற்று வளமோடு வாழ எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுவோமாக!.

நன்றி.

என்றும் இறைபணியில்,

இடம்: ஆய்க்குடி
நாள்: 20-09-2022

S.ராமகிருஷ்ணன்,
தலைவர்.